Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்துசாதனம்

விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது — தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூஎ] யாழ்ப்பாணம்:- மன்மத ஞூ மார்கழிமீ உகஉ வெள்ளிக்கிழமை (13 JANU. 1956) [இல-சக]

# தமிழ் மொழிக்குத் தகுந்த இடம்

## தமிழ் நிலைமைபற்றி சட்ட அறிஞர் மகாநாடு

தமிழ் மொழியின் நிலைமை தமிழ் மக்களின் நிலைமை ஆகியவைபற்றி ஆலோசிப்பதற்கு தமிழ்ப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் யாவரையும் அழைத்து யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் யாழ்ப்பாணச் சட்ட அறிஞரால் சென்ற சனிக்கிழமை மாகாடொன்று கூட்டப்பெற்றது.

இன்று தமிழ்மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் ஏற்பட்டிருக்கும் நிலைமையில் செய்யத் தகுந்தது எது என்று தீர்மானிப்பதில் கட்சிக் கொள்கைகளை விட்டு யாவரும் ஒருமுகப்படவேண்டுமென்றும உள்நாட்டு அரசாங்கப் பகுதியினரையும் அழைத்து மற்றொரு பெரிய மகாநாடு அணிமையில் கூட்டவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## ஆட்சிமுறையில் ஏற்றது செய்தல்

### தமிழ் மக்கள் செய்யவேண்டிய திடசங்கற்பம்

தமிழ்மறைக் கழகத் தலைவர்
பண்டிதர் கா. பொ. இரத்தினம் விடுக்கும் செய்தி

"சேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்" என்று ஆசைப்பட்டார் பாரதியார். தமிழ் வழங்காத நாடுகளிலுள்ள திருக்கோயில்களிலுந் தமிழிசை பொலிய வேண்டுமென்று கருதினர் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்.

தமிழ்மக்கள் வாழும் நாடுகளிற்றானும தமிழ் தக்க இடம் பெற்று விளங்குதற்கு ஆவன செய்யாது நாம் தூங்குகின்றோம். தமிழ் வளர்க்குஞ் சங்கங்களும் ஏன் தமிழறிஞர்களுங்கூட இன்றும் ஆங்கிலம் போன்ற பிறமொழிகளுக்கே முதலிடம் கொடுக்கிறார்கள். தமிழிலே நடத்த வேண்டியவற்றையெல்லாம் பிற மொழிகளிலே செய்கிறார்கள். அடிமை மனப்பான்மை இன்னும் ஒழியவில்லை. தமிழ்ச் சங்கங்கள் பலவற்றின் திருமுகங்களிதழ்களில் தமிழ் ஒரு மூலையில் ஒதுக்கப்படுகிறது. ஆங்கிலம முதன்மை பெறுகிறது. ஆங்கிலம் நன்கு தெரியாதவர்களும் கூடத் தம் கையொப்பத்தை ஆங்கிலத்தி லிடுவது பெருமையான செயல் என்று கருதுகிறார்கள்.

உலகமெங்கும் பரப்பு, இப்பொழுது முடியாவிடினும் தமிழர்கள் வாழுமிடமெங்கு மேனும் தமிழை அரியாசனமோ சரியாசனமோ பெறச் செய்தல் நம் தமிழ் மக்களின முதற் கடமையாகும். இப்பொங்கற் புதுநாளிலே பல நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களுக்குத் தமிழாக்கங் கருதிச் சில வேண்டுகோள் விடுக்க எண்ணுகிறேன். இவற்றை இனி என்றுங் கடைப்பிடிப்போம் இப்பொங்கற்றிருநாளில் யாவரும் உறுதிசெய்து ஊக்கத்துடன் முயலுதல் வேண்டும். தமிழ்ச் சங்கங்களும் தமிழறிஞர்களும் இவற்றை உடனே நடைமுறைக்குக் கொண்டுவருவார்களாக. ஆர்வமிக்க இளைஞர்கள் இவற்றை நிறைவேற்ற ஓர் இயக்கத்தைக்கூடத் தொடங்கலாம்.

அடிமைவாழ்வி லழுந்தி ஆங்கில மோகத்திற் றிளைத்த பெரியார்கள் தமிழை வளர்ப்பார்கள் என்று எண்ணினால் இலவுகாத்த கிளிபோல் ஏமாற்றமடைவோம். ஆகவே இன்னுங் காலத்தைத் தாழ்த்தாமல் இப்புத்தாண்டிற் பின்வருவனவற்றை நிறைவேற்றுதற்கு ஒவ்வொருவரும் உதவிசெய்வோம்.

1 தமிழ் மக்கள் தம்மின மக்களுக்கு எழுதுங் கடிதங்கள் முதலியவற்றையுந் தமிழில் எழுதுதல், தம்மின மக்களோடு நிகழ்த்தும் உரையாடல்கள் முதலியவற்றையுந் தமிழிலே செய்தல்.

2 தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளிலுள்ள (தென்னிந்தியா, இலங்கை, மலாயா, சிங்கப்பூர்) தமிழ் மக்களுக்கு எழுதுங் கடிதங்களில எல்லாம் முகவரியினைத் தமிழில் எழுதுதல்,

3 இலங்கையிலே தந்தி, காசுக்கட்டளை, அஞ்சற் கட்டளை முதலியவற்றையெல்லாம் தமிழிலே எழுதி அனுப்புதல்; பிறநாடுகளிலும் இவ்வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ளுதல்.

4 தமிழ் ஆங்கிலம் ஆரியம் முதலிய எழுத்துக்களைக் கலவாமல் எழுதுதல், இன்னுஞ் சிலர் சிவராஜா என்றும் T. N. சந்தையா என்றும் கலந்து எழுதுகிறார்கள். சிவராja என்று எழுதுவதும் இவற்றைப் போன்றதே.

5 ஆரியம் ஆங்கிலம் முதலிய பிற மொழிகளிலிருந்து எடுத்தாளுஞ் சொற்களையுந் தமிழுருவாகத் திரித்துத் தமிழ் எழுத்துக்களால் எழுதல் வேண்டும். இது தொல்காப்பியர் காட்டிய வழி. அவர் காலந்தொட்டு இன்றுவரை தோன்றிய நல்லிசைப் புலவர் பலரும் மேற்கொண்ட முறை.

# பொங்கலே வருக!

( பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர் )

இராத்திரி காலம் போய்ப் பகல் வந்தால் யாவரும் மகிழ்வர்; யாவும் இன்புறும். ஆண்டுதோறும் தைப் பொங்கல் வரும். தேவர்களின் இராக்காலம் போய் விடிந்தது. ஒளி உதயமாயிற்று. நமது ஈழத் தாயின்மீதும் தமிழ்ஒளிவீசும்என்று எதிர்பார்க்கிறோம்.

பொங்கலின் முதல் நாள் போகி பண்டிகை. இந்திரன் மேக வாகனனாதலின், மழை வளந் தந்தமையை நினைவு கூர்தல். விநாயகர் சூரியன் முதலிய தேவ ஆராதனை தை முதல்நாளாகும். கிருஷ்ண பரமாத்மா கோவர்த்தன கிரியால் பசுசம்ரட்சணை செய்த நலம் போற்றல். பசுக்களின் உயர்வு அறியார் பலர். பசுக்களினால் நாமடையும் பயனும் அளவிறந்தது. காளைகளாலேதான் ஏர் சிறந்தது. உழவுக்கும், அதற் குறுதுணையான பசுக்களுக்கும் வந்தனை செய்வது மக்கள் கடமையே!

பெலம் ஆயுள் கீர்த்தி ஆகியவை சனிபகவானால் உண்டாகும். சனியின் ஆட்சி வீடு மகரம். உத்தரதிசையே பரமபதியாகிய சிவபிரான் விளங்கும் ஒரு இடமாகும். உதயத்தில் ஸ்நான சந்தியாதிகருமங்களைச் செய்து பிதிர்க்கும் தர்ப்பணம் செய்தல் சாலப்புடைத்தாகும். நலந்தரும் தையே வருக! வளந்திகழ் பொங்கலே வருக! என்று இன்புறுவோமாக.

x x x

## பொங்கலின் போற்பு

தென்றமிழ் நாட்டுச்
  செல்வர் நானிலந்
தன்னிடை வைகித்
  தழைத்த தானியம்
பூவுங் காயும்
  புரையில் பழமும்
தேவுக் களித்துச்
  சிறந்தன ரன்றோ!
அன்ன வாறே
  ஆவினங் களிக்கப்
பொன்னக ரிறையும்
  புனித சூரியனும்
மன்னிய அருளை
  வழங்க வேண்டித்
தன்னிக ரில்லாத்
  தமிழகச் சீரியோர்
கரும்பும பழமுங்
  கட்டியுங் கூட்டிட
விரும்பும் பொங்கல்
  வந்தது; இதுவோ
உளமகிழ் ஊட்டும்
  வளந்திகழ் பொங்கல்
களங்க மின்றிக்
  கடவுளைப் போற்றி
ஒன்று பட்டா
  லுண்டு வாழ்வெனும்
பொன்றுப் பொன்மொழி
  பொருந்த நினைந்து
இத்திரு நாளில்
  எழிலபெறும் ஊக்கச்
சத்திய வாசக
  சன்மார்க்கத் தொடு
பிறிவறி வின்றிப்
  பெருந்தகை நல்லீர்!
அறிந்த அருந்தமிழ்
  ஆட்சி மிளிரப்
பழைய நாகரிகப்
  பண்பு விளங்கும்
உழைமின்! விழிமின்!!
  ஓங்கிய தமிழும்
அமிழ்த மென்றே
  ஆற்றுமின்! அன்பாய்
இமிழ்திரை சூழ்ந்த
  ஈழத் தாயும்
இன்பமுற் றினபுறு
  ஆழ் வாழியவே!

சுபம்.

# தைப்பொங்கல்

—————:0:—————

## அறிவிக்கும் சில சிறப்புக்கள்

எம்நாட்டில் நிகழும் தைப் பொங்கல் விழா, மக்கள் வாழ்க்கையின் மூன்று சிறந்ததுறைகளை விளக்கும் தன்மையதாயுள்ளது. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவது உணவுப் பொருள். அத்தகைய உணவுப் பொருளைத் தரும் பயிர்கள் செழித்தோங்கிப் பயன்தரத் தொடங்குங்காலம் தை மாசத்திலேயே தொடங்குகின்றது. வாரி வளங்குன்றி வருதலால் பொருட் பெருக்கத்திலும் பெருங் காலத்திலும் சிறிது மாற்றம் இக்காலத்தில் உண்டாகின்ற போதிலும் உணவு வருகையைக் கண்டு உள்ளம் களிகூரும் காலம் தைமாசமேயாகும், இவ்வருகையை மறைவாய் நின்று ஊக்கியருளும் இறைவற்குப் பொங்கலமுது படைத்து நன்றியறிதலுடன் வழிபாடாற்றுவதே முதலாவதாய் நாம் காணப்பெறும் சிறப்பாகும்.

இவ்வாறு பொங்கிப் படைத்து வழிபடுதற்கு வேண்டும் உணவுப் பொருள் உற்பத்திக்கு மழை இன்றியமையாதது. "தானம் தவம் இரண்டும் தங்கா வியனுலகம் — வானம் வழங்காவிடின்" என்னும் பொய்யாமொழி இதனையே வற்புறுத்துகின்றது. தட்பம் பொருந்திய நீரைத் தருவது வெப்பம் பொருந்திய சூரியனாகும். உணவுப் பொருள் விருத்தியோடு உயிர் வாழ்க்கைக்கே சூரிய ஒளி வேண்டப்படுகின்றது, சூரியனே சடப்பொருள். ஆயினும் அது சித்துப் பொருளாயுமே விளங்குகின்றது. எங்கும் வியாபியாயுள்ள சிவபரம் பொருள் சூரியனைத் தம்முடைய திருக்கோயில்களிலொன்றாய்க் கொண்டருளி அருள் வழங்குதலாலும், தம்முடைய திருக்கண்களிலொன்றாய்க் கொண்டு எம் காட்சிக்கு உபகாரமாய் விளங்குதலாலும் சூரியன் சித்துப் பொருளாதல் காண்க. இக்காரணங்களால் சிவசூரிய வழிபாட்டுச் சிறப்பு இத்திருநாளிற் காணவருகின்றது.

உடல் ஓம்புதல் உயிர் ஓம்புதற்பொருட்டேயாகும். "உடம்பாரழியில் உயிரார் அழிவர் — திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும்மாட்டார்" என்பதனால் உடலோம்புதல் உயிரோம்புதற்கும் உயிரோம்புதல் உண்மை ஞானம் பெற்று இறவா இன்பம் சேருதற்குமாகும் என்பது தானே பெறப்படுகின்றது. ஞானம் பெறுதற்கு உயிர்க்குயிராகிய இறை வழிபாடு வேண்டும். இறை வழிபாட்டுக்குச் சிறந்தகாலம் "பிராமி முகூர்த்தம்" என்னும் விடியற்காலம் என்பர் அனுபவம் வாய்ந்த அறிஞர். இது எந்த நாளுக்கும் பொதுவான உண்மை. மார்கழி முடிகிற அளவில் தேவர்களின் இரவு கழிந்து பகலவன் தோன்றத் தொடங்குகின்றான் என்பர் பெரியோர். ஆகையினாலே அக்காலம தேவர்களின் வழிபாட்டுக்குச் சிறந்த கால

தொடர்ச்சி 6ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். மன்மத ஸ்ரீ மார்கழி மீ
௨௯ உ வெள்ளிக்கிழமை

## பொதுநல உபகாரி திரு. இ. சிவகுருநாதர்

நல்லவண்ணம் வாழ்ந்து நாட்டின் நலனுக்காக அயராதுழைத்துப் பொது மக்கள் நன்மையைப் பேணி வந்த பெரியார்களிலே திருவாளர் இ. சிவகுருநாதர் அவர்களும் ஒருவராவர். தமிழகத்தின் பெரு நன்மைக்காக முன்னாள் நாவலர் பெருந்தகையார் வழிகாட்ட சிறுவப்பெற்ற சைவ பரிபாலன சபையை வளர்த்து வந்த சைவ சீலர்களிலே திரு. சிவகுருநாதர் அவர்கள் சிறப்புரிமை பெற்றவர் என்று சொல்லுதல் அமையும். இந்துசாதனம், ஆங்கிலதமிழ், இதழ்களின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தது மன்றி ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்களின் நன்னினைவு சைவபரிபாலனசபையால் போற்றப்படுதல் வேண்டுமென்று நாவலர் ஆச்சிரமமண்டபத்தை சிறுவும் தொண்டிலே பெரும் பங்கெடுத்தார்.

சைவப்பிள்ளைகள் சைவக் கழகங்களிலே பயின்றுவருதல் அத்தியாவசியம் என்று நாவலர் நற்றகையார் காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை சிறுவிய பரோபகாரி திரு. சி. நாகலிங்கம் அவர்களின் வழித்தோன்றலாகிய திரு சிவகுருநாதர் அவர்கள் இக்கல்விக் கழகங்களின் வளர்ச்சிக்காக நன்குழைத்து அதிகார சபையின் செயலாளராகவும் உபதலைவராகவும் தலைவராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. சைவப் பெண்பிள்ளைகளின் கல்விக்கு ஒரு கழகம் யாழ்ப்பாணநகரத்திலே அவசியமென்றறிந்து அந்நிலையத்துக்கு நன்கொடையாக திரு சிவகுருநாதரவர்களின் உத்தமபத்தினியார் நிலம் வழங்கியவள்ளன்மை யாவரும் அறிந்ததே. இவ்வள்ளன்மைக்குக் காரணராயிருந்ததோடு திரு. சிவகுருநாதர் அவர்களும் இந்தக் கல்விக் கழகத்துக்கு நிலமும் பொன்னும் உதவி அந்நிலையம் வளர்ந்தோங்குவதற்குக் காரணராக இருந்தனர் என்ற உண்மையைச் சைவமக்கள் ஒருபொழுதும் மறக்க மாட்டார்கள்.

அரசியல் அலுவல்களிலும் நன்னோக்கத்துடன் கலந்து திரு. சிவகுருநாதர்

# பரோபகாரி திரு. இ. சிவகுருநாதர் அவர்கள் மறைவு

## கல்வி, சமய, சமூக வளர்ச்சிக்கென வாழ்ந்த பெரியார்

பெரியார் திரு. இ. சிவகுருநாதர் அவர்கள் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பல சுற்றமித்திரர் பரிவுடன் சூழ்ந்து நிற்ப வண்ணார்பண்ணையில் தமதில்லத்தில் தமது 70ம் வயதில் எம் மத்தியை விட்டுப் பிரிந்தார்.

செவ்வாய்க்கிழமை அதிகாலையிலிருந்து அன்பர்களும் இனத்தவர்களும் ஆறெருழுக்குப்போல் போவதும் வருவதுமாயிருந்து பிற்பகல் மூன்று மணியளவில் அன்னாரின் தொகை உச்சநிலையெய்தியது. சைவக்கிரியைகள் சிறப்பாக நடைபெற்ற பின், பெரியாரின் பூதவுடல் பொன்மயமாயலங்கரிக்கப்பெற்ற தேர் மீது ஏறியது. இல்லத்திலிருந்து மயானம்வரையில் மகர தோரணம் முதலியவற்றால் அலங்கரிக்கப் பெற்ற வீதி வழியே அன்பர்கள் ஆர்வத்துடன் தேரை இழுத்துச் சென்றனர். கோம்பையன் மணல் மயானத்தைத் தேர் எய்தியதும் பெரியோரைப் பேணும் பெருநெறியில் நின்று திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், நகரசபைத் தலைவர், எம். எம். சுல்தான், எஸ். ஆர். கனகநாயகம், எஸ். பீ. கந்தையா, நீதிபதி எஸ். தம்பித்துரை, முகாந்திரம் இ. பி. இராசையா, முதலியார் சி. முத்துத்தம்பி ஆகியோர் பெரியாரின் பூதவுடலை ஈம விறகுக் குவைக்குத் தாங்கிச் சென்றனர். எண்ணுக்கடங்காச் சுற்றமித்திரர் சூழ்ந்து நிற்ப, பெரியாரின் தமையனார் மகன் திரு. சிவசுப்பிரமணியம் இராசவரோதயர் ஈமக்கிரியைகளைச் செய்து நிறைவேற்றினர்.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் பெரியாரின் சிறப்புக்களை எடுத்துக்காட்டிச் சொற்பொழிவாற்றினர். திரு சிவகுருநாதர் அவர்கள் வண்ணார்பண்ணையிலுள்ள பலம்மன்மக்கள் பரம்பரையில் வந்தவர். அவர் மூடிக்குரி வழக்கறிஞர் திரு. பிறவுன் சின்னத்தம்பி அவர்களின் புத்திரர்களில் ஒருவராகிய திரு இராமலிங்கம் அவர்களின் புத்திரராவர். மற்றவர் நியாயவாதி திரு. சி. நாகலிங்கம் ஆவர். இவருடைய வாழ்க்கைத் துணைவியாராகிய ஸ்ரீமதி விசாலாட்சி அம்மையார் வைத்தியகலாநிதி த. சிவப்பிரகாசபிள்ளை அவர்களின் புத்திரியும் வழக்கறிஞர் திரு. சி. தம்பையாபிள்ளை அவர்களின் சகோதரியுமாவர். இவர் தமக்குப் பரம்பரையாய் வந்த தகுதிக்கேற்ப யாழ்ப்பாணம் நகரசபைத்தலைவராயிருந்தும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முகாமைக்காரர் சபைத் தலைவராயிருந்தும், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத்தலைவராயிருந்தும் பிற பிற பல துறைகளிற் சென்றும், நாட்டு முன்னேற்றத்துக்குப் பெரும் பணியாற்றினார். இந்து மகளிர் கல்லூரிக்குக் கொடுத்த நில நன்கொடை இவருடைய பெரும் தியாகங்களுள் ஒன்று. இவர் தமக்கென வாழாது பிறர்க்குரியரா

தொடர்ச்சி 5-ம் பக்கம்

அவர்கள் நகர சங்கத்திலே அங்கத்தவராகவும் தலைவராகவும் திறமையுடன் கடமையாற்றினர். தமிழ் மக்களின் பெரு நன்மைக்காக உள்ளத் தூய்மையுடன் உழைத்து வந்தனர். இவற்றின் மேலாக நற்குண நற்செய்கைகளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து இன்னா செய்யாது இன்சொற்பேசி இதமாக நடந்து எல்லாருள்ளத்திலும் குடிகொள்ளக்கூடிய சீலமும் தகைமையும் உடையவராய் மக்களின் மதிப்பைப் பெற்றார். இவ்வுலக வாழ்வை நீத்த இப்பெரியாரின் பிரிவாலே துயருறும் இவர்கள் அருந்தவப் பாரியாருடனும் சுற்றமித்திரருடனும் எங்கள் அநுதாபம் [illegible] கின்றது.

## வழக்கறிஞர் இ. சிவகுருநாதர் அவர்கள்

அத்துவக்காத் ஸ்ரீ சி. நாகலிங்கம் அவர்களின் தமையனாரும் அக்காலத்தில் யாழ்ப்பாணம் சுங்கப் பகுதியில் பிரதான உத்தியோகம் வகித்திருந்த ஸ்ரீ இராமலிங்கம் அவர்கள் செய்த தவப்பயனாக அவருக்கு புத்திரனாக வுதித்து சுயநலமின்றிப் பிறர் நலத்தையே பெரிதும் கருதினவராய் தேச விருத்தி சமய

சென்றோர் யார்தான் முகம் கோணித் திரும்பினர். செய்யக்கூடிய உதவி எதுவெதுவோ அதை அதையெல்லாம் அவருதவியை நாடிச்சென்ற யாவர்க்குஞ் செய்துவைத்தனர் இன்சொல் அன்றி வெஞ்சொல் இவர் வாயினின்று எப்பொழுதாவது பிறந்திருக்கமாட்டாது. எக்கோமும் புன்னகையினின்று முகத்தையேயன்றி கோபமுகத்தை இவரிடத்தில் யாண்டும் கண்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

ஸ்ரீ சி. பசுபதிச் செட்டியார்

விருத்திக்கேற்ற முயற்சிகள் எவை யெவையோ அவை அவைகளை யெல்லாம் மிக்க சிரத்தையோடு செய்த ஸ்ரீ சிவகுருநாதர் அவர்கள் சென்ற திங்கட்கிழமை பிற்பகல் சிவபதமடைந்தார். இவர் தேகவியோகமான செய்தியைக் கேட்டு கலங்கி கவலையுறாதார் யாருமில்லை.

தேசாபிமானம், சமயாபிமானம் பரோபகாரம், உதாரகுணம், பொறை, தயை, சாந்தம் முதலிய நற்குணங்கள் ஸ்ரீ சிவகுருநாதர் அவர்களிடம் மிகவும் அமைந்திருந்தன தேசாபிமானத்தாலும் சமயாபிமானத்தாலும் உந்தப்பெற்றன்றோ யாழ்ப்பாண நகரசபையிலும் அனேக வருஷங்களாக அங்கத்துவம்பூண்டு அதன் தலைவராகவும் அமர்ந்து புகழெய்தினர், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையிலும் இந்துக்கல்லூரி அதிகாரசபையிலும் அக்கிராசனராக பல ஆண்டுகளாகக் கடமையாற்றி சென்ற ஆண்டில் சுகவீனம் காரணமாக அப் பதவிகளைத் துறந்தார். இவரும் இவரது தர்மபத்தினியும் இந்துமகளிர் கல்லூரியை ஸ்தாபிப்பதில் எடுத்துக்கொண்ட முயற்சிகள் மிகவும் போற்றத்தக்கவையாகும். இதற்குக் காணியாகவும் பணமாகவும் தம்மால் இயன்ற மட்டும் உதவியுள்ளார்கள். இன்னும் நன்மை பயக்கக் கூடிய கருமங்களில் எல [illegible] இவரிடம் குறையிருந்து

ஆசிரியல் லீ:

# சனநாயகமா இனநாயகமா?

## பாக்கிஸ்தான் போக்கு இங்கும் நிகழுமா?

பாரத நாட்டிலிருந்து பிரிந்த பாகிஸ்தானம் உலகம் முழுவதையும் திடுக்கிடச் செய்துவிட்டது. சனநாயக வேதாந்தம் பேச்சளவில் நின்றுவிட மதநாயகக்கொள்கை வெளியாகிவிட்டது. இசுலாமிய தேசமாக எழுந்துவிட்டது பாகிஸ்தானம். ஈழத்திலே எதை எதிர்பார்க்கலாம் என்று எடுத்துச் சொல்லவும் வேண்டுமா?

இந்துக்கள் நூற்றுக்கு எண்பதுக்கு மேலுள்ள பாரத நாட்டிலே எல்லா மதங்களுக்கும் சம உரிமை. இனங்கள் யாவும் ஒரு சமன். ஆனால் பாக்கிஸ்தானத்திலோ மகம்மதிய மதமே சதமெனச் சட்டம் தோன்றிவிட்டது. இந்த மதவாடைக் காற்று இலங்கையிலும் வீசி மதவெறிப் பீடையை உண்டாக்கி விடாது என்று எப்படி நம்புதல் கூடும்? புத்த குருமாரின் அரசியல் இயக்கத்தின் சக்திக்கு எதிராக சிங்களத் தலைவர்கள் ஒன்றும் செய்ய ஆற்றலவர்களாய் நிற்கின்றமையை நோக்குமிடத்து இந்நாட்டிலே மதச்சட்டம் வருவது அசாத்தியமான தொன்றல்லவென்றே சொல்லலாம்.

### தேர்தலோ தேர்தல்

தேர்தல் தேர்தல் என்று மேடைப்பேச்சாளர் பேசப்பேசத் தேர்தலும் பாய்ந்து வந்துவிட்டது. சுப இலக்கின சுப முகூர்த்தத்திலே அரசியல் ஆதிக்கவேட்டையாடப் புறப்படுவதற்கு நாளும் கோளும் பார்த்துக் கொண்டிருந்த ஐ. தே. கட்சியார் நாள் வைத்துவிட்டார்கள். சிங்களமே மொழி என்று களனியிலே தீர்மானம் நிறைவேற்றும் நேரத்தைவிட நிறைந்த நாள் வேறு கிடைக்குமா? ஆனைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பது பழமொழியல்லவா? ஐ. தே. க. ஆனைத் தேர்தற் பவனிக்கு சிங்கள மொழித் தீர்மான மணி வழிகாட்டும் நாதகோஷமாய் அமைவது அருந்தவப் பேறல்லவா?

சனநாயகம் என்பது உண்மையிலே ஒரு இனநாயகந்தானா? எண்தொகை கூட்டினால் எல்லாம் இயற்றி முடிக்கலாம் என்பதுதானோ இக்காலச் சனநாயகம்! சமத்துவம் சகோதரத்துவம்!! என்ன விபரீதம்? என்ன அசம்பாவிதம்!! ஆள் அடுக்கு இல்லாவிட்டால் வாழ்வுக்கு இடமில்லையாம்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சித்தாந்த நுண்பொருள் விளக்கம்

## வித்தியாபீடம் சைவசித்தாந்தத்துக்கு அமைக்க வேண்டுகோள்

### அமைச்சர் நடேசன் அவர்களின் சைவசித்தாந்த மகாசமாசத் தலைமைப் பேருரை

(முற்றொடர்)

உலகத்தின் கன்ம வயத்தால் விருப்பு வெறுப்புகளிலும் சுக துக்கங்களிலும் மாறிமாறிச் சுழலும் ஆன்மா தர்ம உணர்ச்சியைப் பெற்றுப் புண்ணியத்தைச் செய்து பாபத்தைத் தவிர்க்கின்றது. ஆயினும் உலக வாழ்க்கையில் அவர்ப்படைகின்றது. மலபரிபாகத்தால் இருவினை ஒப்பு நேர்கின்றது. நித்தியமாகக் கருதியிருந்த வாழ்வு அநித்தியம் என்ற உண்மை வெளியாகின்றது. ஆன்மா பொய்ச் சார்பைவிட்டு மெய்ச் சார்பை நாடுகின்றது. இந்த நிலைமைத்தான் பட்டினத்தடிகள் நமது நெஞ்சை நெகிழ்க்கும் வகையில்,

ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல
உற்றுப்பெற்ற
பேரும் சதமல்ல பெண்டீர் சதமல்ல
பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல
தேசத்திலே
யாரும் சதமல்ல நின்றாள் சதம்கச்சி
யேகம்பனே.

என்று காட்டியுள்ளார்கள். ஆன்மா பொய்ச் சார்பை விடுகின்ற காலத்தில், மெய்ச்சார்பாகித் திருவருட் சக்தியின் மடியில் வீழ்கின்றது. திருவருட்சக்தி ஆன்மாவில் பதிகின்றது. இதுவே சக்திநிபாதம் என்று சொல்லப்படும். ஆன்மா சுத்தநிலையில் பிரவேசிக்கின்றது, இந்த அவதரத்தில் இறைவனே சற்குருவாக எதிர்ப்படுகிறான். சற்குருவை அதிஷ்டித்து இறைவனே ஆன்மாவுக்கு அருள் செய்கிறான் என்பது சைவசித்தாந்தக் கருத்தாகும். ஞானப்பிரசாதத்தை அருள வல்லவன் சிவனே. ஆதலின், குருவே சிவமெனக் கூறினன் நந்தி" என்று திருமூலர் அருளினர். மாணிக்கவாசக சுவாமிகள்,

அருபரத்தொருவன்
அவனியில் வந்து
குருபரனாகி அருளிய பெருமை

என்றும்,

ஈறிலாதநீ எளியை யாகிவந்
தொளிசெய் மானுடமாக
நோக்கியும்

என்றும் சிவனே சற்குருவாகத் தோன்றிய வரலாற்றைக் கூறியுள்ளார்கள். திருவாசகத்தின் இரகசியார்த்தம் இவ்வுண்மையைப்பற்றியதேயாம். ஆன்மா தானகச் சிவஞானத்தைப் பெறுவதில்லை. சற்குருவின் கடாக்ஷத்தினால் அதைப் பெறுகின்றது. இதுவே தீக்ஷையாகும்.

குருவருளாற் காட்டிடவும்
அன்பரைக் கோத்து
அறவிழுங்கிக் கொண்டப்பாலும்
தெரிவரிதாய்க் கலந்த
தெந்தப் பொருள்
அந்தப் பொருளினையாம்
சிந்தைசெய்வாம்

என்றும்,

விண்ணாதி ஐம்பூதம்
தன்னகத்தே அடக்கி
வெறு வெளியாய் ஞானக்
கண்ணாக் கண்டவர்தம்
கண்ணூடே
ஆனந்தக் கடலாய்

என்றும் தாயுமான சுவாமிகள் குருவருளை வியந்து கூறினார்கள். இதற்கப்பால் பெறும் அநுபவத்தை மாணிக்கவாசக சுவாமிகள்,

காட்டாதன வெல்லாம் காட்டிச்
சிவங்காட்டித்
தாட்டாமரை காட்டித்
தன்கருணைத் தேன்காட்டி
X X X
ஆட்டான் கொண்டாண்டவா
பாடுதும் காணம்மானாய்

என்று அருளிச் செய்துள்ளார்கள். சற்குரு உணர்த்த ஆன்மா பெறும் உபகாரத்தைச் சிவஞான போதம்,

ஐம்புல வேடரின் அயர்ந்தனை
வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த்
தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னிய மின்மையின்
அரன்கழல் செலுமே

என்று கூறியது. பஞ்சேந்திரிய வாழ்க்கையில் மயங்காது ஆன்மா சிவத்தோடு அத்வைதமுற்றுச் சிவபோகம் துய்க்கும் என்பது சைவ சித்தாந்த முடிபாகும்.

ஆன்மாக்களின் பொருட்டுச் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்ற பஞ்ச கிருத்தியங்களை இறைவன் என்றும் நடத்துகிறான் என்பது சைவசித்தாந்தக் கொள்கை. இதைச் சைவ சித்தாந்தம் இறைவனது நடன இயக்கமாகக் காட்டுகின்றது. சைவ தரிசனம் அண்ட பகிரண்டங்களை எல்லாம் அளாவி அணுத்தோறும் நடக்கும் இறைவனது இயக்கத்தைக் காண்கின்றது. சிவத்தோடு பிரியாது ஆன்மாக்களையும் உலகத்தையும் இயக்கும் சக்தி சிற்சக்தியாகிய திருவருட் சக்தி என்றும், உலகம் தோன்றும் மாயாசக்தி இதனின்றும் வேறாக இறைவனது பரிக்ரக சக்தியாயுள்ளது என்றும் சைவ சித்தாந்தம் கொள்கிறது. மாயை சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்று மூவகைப்படும். ஆன்ம தத்துவமாகிய பிரகிருதி மாயையைப்பற்றி சாங்கியம் முதலான ஏனைய தரிசனங்களும் கூறும். ஆனால் இதற்கு அப்பாலுள்ள சிவ தத்துவமாகிய சுத்த மாயையைப்பற்றியும், வித்தியா தத்துவமாகிய அசுத்த மாயையைப் பற்றியும் சைவசித்தாந்தம்ஆராய்கின்றது. சப்தப் பிரபஞ்சம் சுத்த மாயையினின்றும், அர்த்தப் பிரபஞ்சம் அசுத்த மாயையினின்றும் உண்டாவதைச் சைவ சித்தாந்தம் விளக்குகின்றது. நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை என்ற சுத்தமாயா தத்துவங்களையும், கலை, நியதி, காலம், வித்தை, அராகம் என்ற அசுத்தமாயா தத்துவங்களையும் நுணுகி ஆராயும் சிறப்பு சைவசித்தாந்தத்துக்கு உரியது.

சைவ சித்தாந்தத்தைத் தமிழில் விளக்கும் நூல்களுள் முக்கியமானவை திருமூலர் அருளிய திருமந்திரமும், வாகீசமுனிவர் இயற்றிய ஞானமிர்தமும், மெய்கண்ட தேவர் முதலிய சந்தானசாரியர்கள் அருளிய மெய்கண்ட சாத்திரங்களுமாம்." சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் என்ற மெய்கண்ட சாத்திரங்கள் பிரதானமானவை. பண்டைக் காலத்திலின்று தமிழகத்தில் சைவ சித்தாந்தக்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

### படித்த கமக்காரர் முயற்சி பிழைக்கின்றதா?

எஸ். எஸ். ஸி. அறிவு பெற்ற இளம் கமக்காரர் செய்யும் முயற்சி சித்தியடைவதாயில்லை என்று காணிப்பகுதி அமைச்சருக்கு அறிக்கைகள் போகின்றனவாம். ஆகையினாலே கிளிநொச்சி, காலி, மாத்தறை ஆகிய இடங்களிலுள்ள கமங்களைத் தாமே பார்ப்பதற்கு அமைச்சர் தீர்மானித்துள்ளாரென அறிய வருகின்றது.

### கொழும்பு முஸ்லிம்—சோனக தீர்மானத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு முஸ்லிம் — சோனகசங்கங்களின் மொழித் தீர்மானம்பற்றி எங்கும் பலத்த முஸ்லிம் எதிர்ப்பு. கிளைச்சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட மகாநாடொன்றைக் கூட்டிக் குறித்த தீர்மானம் பற்றி ஆலோசிக்கவேண்டுமென்பது பல முஸ்லிம் தலைவர்களின் கருத்து. இவை இப்படியிருக்க கொழும்பு முஸ்லிம்—சோனக சங்கத்திலிருந்து, கிளைச்சங்கங்கள் நீங்குதற்கு ஆலோசிக்கின்றனஎன்றுங்கூறப்படுகின்றது.

# உயிர்க்குருதி தருவது திருமுறை

## அக இருளைப் போக்கி, அருள் ஒளியைப் பரப்புவது

தமிழும் சைவமும் தழைத்து விளக்கமுறும் நல்ல காலம் தோன்றியுள்ளது தமிழ்நாடு பக்தி மிகுந்த நாடு. அன்பு, அருள், இரக்கம், ஈகை, உண்மை முதலியன நிறைந்த நாடு. இந்நாட்டில்தான் இறைவனருள் பெற்ற மெய்யடியார்கள் பலர் தோன்றியுள்ளனர். இதனாலன்றோ தமிழ்நாட்டை "மாதவஞ் செய்த தென்திசை" எனப் போற்றியுள்ளார் சேக்கிழார்.

இந்நாட்டார் பேசும் மொழியாகிய தமிழ், தொன்மையும் பெருமையும் இலக்கண வரம்பும் உடையது. இத்தகைய தமிழ் மொழியில், மொழிக்கு மொழி தித்திக்கும் அருட் பாடல்களைக் கொண்டதே பன்னிரு திருமுறையாகும். இதனைப் பாடியவர்கள் சிவனருள் பெற்ற அடியார்கள் ஆவார்கள். திருஞான சம்பந்தர்தேவாரம் முதலாகச் சேக்கிழார் பாடிய பெரிய புராணம் ஈறாக உள்ளவை பன்னிரு திருமுறைகளாகும்.

இவற்றுள், சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும பாடிய தேவாரம் முதல் ஏழு திருமுறைகளாகும். மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் திருக்கோவையார் எட்டாந் திருமுறை. திருமாளிகைத் தேவர், சேந்தனார் முதலிய ஒன்பதின்மர் பாடியவை ஒன்பதாந் திருமுறை. திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாந் திருமுறை. திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார் முதலிய பன்னிருவர் பாடியவை பதினோராந் திருமுறை. சேக்கிழாரின் பெரிய புராணம் பன்னிரண்டாந் திருமுறை. இத்திருமுறைப் பாடல்கள் மொத்தம் 18360 ஆகும். பாடியவர்கள் இருபத்தெழுவராவர்.

பன்னிரு திருமுறைகளும் பன்னிரு கதிர்களைப் போன்றவை. புறத்திலுள்ள இருளை நீக்கி ஒளிதந்து உலகப் பொருளை விளக்கும் கதிர்களே போன்று இறை உணர்வை மறைக்கும் அகத்திலுள்ள இருளைநீக்கி சிவத்தை விளக்குவன திருமுறைகள். இதனைப் பாடியவர்கள் இருபத்தேழு விண்மீன்களை ஒப்பவர்கள். இவருள் திருவாலவாயுடைய பெருமானும் ஒருவராவர்.

இத்தகு சிறப்பினை உடைய திருமுறைகள் பாடப்பட்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் சென்றுவிட்டன. திருமுறைகள் என்பதற்குத் 'தெய்வத் தன்மையுடைய நூல்கள்' எனவும் சிவத்தை யடையும் நெறி எனவும் பொருள்கள் கொள்ளப்படுகின்றன. நூல்களின் உட்பொருள் கொண்டே திருமுறை என்ற பெயர் வழங்கலாயிற்று.

உலகிலுள்ள பிறமொழிகளில் தமிழ் மொழியிலுள்ள அருட் பாடல்களைப் போன்று காணமுடியாதென மேனாட்டறிஞர்களும் குறிப்பிட்டுள்ளனர். இப் பெருமையினைத் தமிழ் மொழிக்குக் கொடுப்பனவற்றுள் பன்னிரு திருமுறைகளே தலையாயவைகளாகும். இவை சிவநெறித் தொடர்புடையன வாயினும் தமிழ் வளமும், உள்ளமுருக்கும் ஆற்றலும் மிக்கனவாய் இருத்தலின், பிற மதத்தவர்களையும் ஈர்த்து ஆட்கொண்டு இன்புறுத்துகின்றன. இசைவளம், இலக்கியச் சுவை, அன்பின் சிறப்பு அடியார் பெருமை முதலியன திருமுறைகளில் சிறப்பாக அமைந்து விளங்குகின்ற மாட்சியைக் காண்போர் சிறந்த தமிழ் நூல்கள் திருமுறைகள் என்றுபெருமை கொள்வர். இத் திருமுறைகளில் முதற் பதினொன்றையும் இராசராசசோழன் விருப்பப்படி நம்பியாண்டார் நம்பிகள் வகுத்து வைத்தார். சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாவது திருமுறையாக்கிச் செப்பேட்டில் எழுதி வைத்தவர் அநபாயச் சோழராவர்.

'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர்வாக்கும், 'அன்பே சிவம்', 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்', 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற திருமூலர் வாக்குகளும் 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்ற பட்டினத்தார் வாக்கும் இவைபோன்றனவும் திருமுறைகளில் உள்ளவைகளே. இவை திருமுறை நீதிகள் எனத் தெரியாமலே சிலர் கையாண்டு வருவதை நாளும் காண்கிறோம்.

எனவே துன்பம் நீக்கி இன்பம் பெற ஆண்டவனை வழிபடுதல் இன்றியமையாதது. இறைவனை வழிபடுங்கால் திருமுறை ஓதுவது சாலச் சிறந்ததாகும். 'அன்பே சிவம்' என்பதுதான் திருமுறைகளின் முடிந்த முடிவு. வாழ்க திருமுறை!

— தமிழ்நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புறமதச் சூழலில்
# ஒரு கற்பகச் சோதி

( செ. கோ. )

இஃதென்னமாயம். இது என்ன விந்தை. பார்க்கப் பார்க்க ஆனந்தம். சிந்திக்கச் சிந்திக்க யோசனை அந்த யோசனை ஒரு முடிபுக்கு வருகிறது. அது தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரையா சொல்லிய "மாமருந்தைத் தேன்பொங்லைத் திரவியத்தை" என்ற ஆப்தவாக்கியப் பொருளாகின்ற கற்பகச் சோதி. அது ஒரு உண்மை மந்திரப் பொருளென உணர்ந்தேன். அது ஆழ்ந்த ஞானக்கருத்தாகும்.

இன்றைக்கு தமிழகத்தார் பலர் வேண்டிய அளவுக்கு அறியாதவகையில் இச் சோதி இருக்கிறது. இந்தச்சோதிதான் ஸ்ரீமத் ஆறுமுகநாவலசற்குரு நாதசுவாமிகளின் திருவுள்ளத்திற் றோன்றிய ஆப்த வாக்கியங்களைக் கொண்டு மிளிரும் திருக்கேதீச்சரமாகும். இக் கேதீச்சரமே கற்பகச்சோதியாகும். இந்தக் கற்பகச்சோதி உண்மையான ஒரு சிவசோதியாகும். நான்கு பக்கமும் காடு. புறச்சமயம் சூழ்ந்த இடத்தின் மத்தியிலிருக்கிறது. பரமபதியாகிய பரமசிவனாரே தமக்கு ஒரு தொண்டனாக ஆட்கொண்டு வைத்த சிவனடியாரல்லவா நாவலர் அவர்கள் ஆதலினால் நாம் சிவபெருமானையும் அவருக்கு அடிமை பூண்ட நாவலரையும் இந்தக் கற்பகச் சோதியில் காண்கின்றோம். சைவமக்கள் ஒவ்வொருவரும் இந்தச் சோதியைத் தரிசிக்க வேண்டும். தரிசித்துப் பிறவிப் பயனைப் பெறுதல் வேண்டும்.

“மூவரென இருவரென முக்கண்
ணுடை மூர்த்தி
மாவின் கனிதூங்கும் பொழில
மாதோட்ட நன்னகரில்
பாவம் வினையறுப்பார் பயில்
பாலாவியின் கரைமேல்
தேவன் எனையாள்வான் திருக்
கேதீச்சரத்தானே”.

# நாவலருக்கு நாம் செய்யவேண்டியது

# சைவப் பெரும்பணி நாடெங்கும் பரவச் செய்தல்

(முற்றொடர்)

வாதத்தினால் சில சமயங்களில் வெற்றி கிடைக்கிறது. பிடிவாதத்தினாலும் சில வேலைகளின் காரியம் கைகூடுகிறது. நாவலர் வாழ்க்கையில் இவைகள் அனைத்தும் பிரதிபலிப்பதை உற்று நோக்கினால் நன்கு உணரலாம் நாவலர் அவாகள் பீட்டர் பார்சிவலுடனும், அக்கால அரசாங்க அதிப (ஏசண்ட) ருடனும் இட்ட வாதங்களை எண்ணிப் பார்த்தோமாமானால் அவரது வீரதீரமும் திடநம்பிக்கையும், மனவுறுதியும் அஞ்சா நெஞ்சமும் தெற்றென விளங்கும். பெரிய மனிதர்களுடைய வாழ்க்கை சாதாரண மக்களிடத்தில் ஒரே பிரேமையை உண்டு பண்ணி விடுகிறது. இதனால் இவர்கள் சாதாரண மக்கள் மனதினின்றும் மறைவதில்லை.

பெரியோர்கள், மகான்கள், தீர்க்கதரிசிகள் இம் மண்ணுலகில் நீடித்தகாலம் சீவிப்பதில்லை. நாயன்மார்களில் சம்பந்தர் 16 வயதிலும், சுந்தரர் 18 வயதிலும், மணிவாசகர் 28 வயதிலும் முத்தியடைந்தனர். விவேகானந்தர் பாரதியார் முதலியோர்களும் அதிக காலம் இம்மாநிலத்தில் நீடித்திருக்கவில்லை. அதே போன்று நம் நாவலரவர்களும் தமது 57 வது வயதில் இறைவன் திருவடி யடைந்தார்." ஆறுமுக நாவலரைப்போலே அவதாரமில்லை இனிமேலே".

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையாகிய எல்லாவற்றையும் துறந்து மன்னுயிருக்காகத் தன்

திரு. வெ. சு. நடராசா
கொழும்பு

வாழ்வையே தியாகம்செய்த மகா புருஷர் நாவலரவர்கள் இலட்சியத்திற்காகவே வாழ்ந்தார் என்றே கூற வேண்டும். துன்பங்களையெல்லாம் இன்பமாக அனுபவித்தார். மற்றவர்களுக்குச் சும்மா உபதேசம் செய்யப் பிறக்கவில்லை. மற்றவர்களை நல்வழிப் படுத்தவே அவதரித்தார். வருங் காலத்தில் என்ன நடக்கப் போகிறதென்று தெரிந்துகொண்டே பணியாற்றினார்போலும் நம நாவலர். பல கோணங்களிலிருந்து நாம் நாவலரது வாழ்க்கையைக் கண்டு கொண்டோம். இனி நாம் அவருக்குச் செய்யக்கூடிய கைம்மாறு யாது? நாமும் எமது எதிர் காலத்தில் பல நாவலர்களைத் தோற்றுவிக்க வேண்டும். நாவலர் மேல்நாட்டில் பிறந்து பணியாற்றியிருந்தால் இதுவரையில் அவரது பெயரில சங்கங்களோ சபைகளோ ஏற்பட்டு உலகமெலாம் பரவியிருக்கும். ஏன் நாமும் அவர் தொண்டைப் பின்பற்றிப் பணியாற்றக் கூடாது. ஆற்றலாம் ஆற்ற வேண்டும்.

“செந்தமிழும் சிவநெறியும்
செழித்திடவே நல்லூரில்
[illegible]
[illegible]”

# பதவி வேட்டையால் வந்த ஆபத்து

## அனைவரும் ஒருமுகமாகத் தீர்மானம் செய்யுமாறு வேண்டுதல்

கோப்பாய்வடக்கு கிராமமுன்னேற்றச் சங்கக் கூட்டத்தில் தலைவர் திரு. இ குமாரசுவாமி பேசும்போது "சோல்பரி அரசியல் திட்டத்தில் சிறுபான்மையினருக்கு வேண்டிய பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அது நடைமுறையில் பலமிழந்துதோற்றுவிட்டது. பெரும்பான்மையினரின் முரட்டுத்தனமான சர்வாதிகாரத்தின் முன்னால் இந்தப் பாதுகாப்புகள் நின்றுபிடிக்க முடியவில்லை.

திரு. ஜி ஜி. பொன்னம்பலம் 60 40ஐ ஏற்க மறுத்து 50 க்கு 50 கோரித் தோல்வியடைந்த சமயத்தில்தான் சிறுபான்மையினராகிய தமிழ் மக்களின் தோல்விப்படலம் ஆரம்பமாகியது. திரு. பொன்னம்பலம் லண்டன் சென்றிருந்தபோது. திரு. நடேசபிள்ளை முதலானோர் சோல்பரித் திட்டத்தை ஆதரித்து வாக்களித்தது அப்படலத்தின் முதலாம் அத்தியாயமாகும். மக்களின் உரிமைக்காகப் போராடிய தலைவர்கள் மந்திரிப் பதவிகளுக்கு ஏமாந்து நிபந்தனையற்ற சரணாகதியடைந்ததால் இரண்டாம் அத்தியாயமும் பூர்த்திசெய்யப்பட்டது. சிங்கள வகுப்புவாதிகளால் ஏமாற்றப்பட்ட நம தலைவர்கள் இலங்கை இந்திய உரிமைக்கு எதிராக வாக்களித்தது தமிழ்மக்களின் தோல்விப் படலத்தில் மூன்றும் அத்தியாயத்தையும் அமைத்துக்கொண்டனர்.

இத் தோல்விப் படலத்தை மாற்றியமைக்க வழி சஷ்டிதான் என்று சொல்லப்பட்டாலும் அது நடைமுறையில் சாத்தியமானதல்ல. சமஷ்டியின் மூலம் அமையும் மத்திய அரசாங்கம் ஒரு சர்வசிங்கள ஆட்சிப்பீடமாகவே இருக்கும். தனித்தமிழ்ராஜ்யம் அமைப்பது சென்னை மாகாணத்துடன் சேருவது என்ற யோசனைகளும் நமக்குத் தீமை பயப்பனவேயன்றி நன்மை தரமாட்டா.

இச்சமயத்தில் சிறுபான்மையினர் தம்முள் வேறுபாடு காட்டாமல் ஒன்றுபட்டு உரிமையைக் காக்க முன்வரவேண்டும். யாழ்ப்பாணத் தமிழ்மகனாகப்பிறந்த செனட்டர் அஸீஸ் கூடுவிட்டு கூடு பாய்ந்து தாய்மொழிக்குத் துரோகஞ்செய்துவிட்டது நம்மெல்லோருக்கும் அவமானமேயாகும். அவர்மட்டுமல்ல மன்னார்ப் பிரதிநிதியின் போக்கும் சிறுபான்மையினத்துக்குத் தீமையைத்தான் தேடித் தருகின்றது. என்று, தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்துக் கொடுக்கப்படவேண்டும் என்னும் பிரேரணைபற்றிப் பேசும்போது கூறினார்,

### அமெரிக்கா—உருசிய அணுக்குண்டுப் போட்டி

வேறுபலதுறைப் போட்டிகளுடன் அமெரிக்காவுக்கும் உருசியாவுக்குமிடையிலுள்ள அணுக்குண்டுப் போட்டி உச்ச நிலையை எய்திவிட்டதாம். கண்டத்துக்குக் கண்டம் பாய்ந்து அழிவு செய்யக் கூடிய குண்டு ஒன்றை உருசியா உண்டாக்கிக் கொண்டதென்று கூறப்படுகின்றது, எனவே உலக இறுதியை உடனே தரக்கூடிய ஆயுதத்தை ஆக்குவதில் ஆர் கூடிய சித்தி பெறுவது என்ற நிலைமையில் இவ் விருநாடுகளின் போட்டி இப்பொழுது வந்துள்ளது.

# சைவ சித்தாந்த நுண்பொருள்விளக்கம்

3-ம் பக்கத்தொடர்ச்சி

கொள்கைகள் நிலவி வந்தன என்று கருதுவதற்கு ஆதாரமுண்டு. திருவள்ளுவர் அருளிய குறளில் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் காணப்படுகின்றன. இக்காலத்திலும் சைவ சித்தாந்தத்துக்கு உறைவிடமாக இருப்பது தமிழகமே. காஷ்மீர சைவமும் வங்கநாட்டுச் சாக்தமும் சைவ சித்தாந்தம் கூறும் நாதம், விந்து முதலிய சூக்ஷ்ம தத்துவங்களை ஒப்புக்கொள்ளினும், சில முக்கிய கொள்கைகளில் சைவசித்தாந்தத்தினின்று வேறுபடுகின்றன. சுத்த சைவசித்தாந்தக் கொள்கைகள் தமிழகத்தில்தான் நிலைபெற்றுள்ளன.

சைவசித்தாந்த ஆராய்ச்சிக்குச் சிறப்பாக உரிய இடம் சிதம்பரமாகும். இங்குள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத்தின் சுபக்க பரபக்க ஆராய்ச்சிக்கு ஒரு வித்தியாபீடம் இருத்தல் வேண்டும். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பௌத்த சமய ஆராய்ச்சிக்கு ஒரு வித்தியாபீடம் நியமிக்கப்பட இருப்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன் சைவ சித்தாந்த சாத்திரங்கள் இரண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினின்று நல்ல முறையில் வெளியிடப்பட்டிருப்பது போல, [illegible] சித்தாந்த சாத்திரங்களும், இதுகாறும் அச்சிடப்படாத வடமொழிச் மைவாகமங்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினின்று சைவ சித்தாந்த வித்தியாபீடம் மூலம் வெளிவரவேண்டும். சைவ சித்தாந்தக் கல்விக்குரிய பட்டங்கள் திட்டமிடப்பட வேண்டும். இப் பட்டங்களைப் பெற்றவர்களே சென்னை அரசாங்கத்தின் பரிபாலனத்திலுள்ள சைவ ஆலயங்களுக்கு நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்படவேண்டும். சைவ சித்தாந்த வித்தியா பீடத்தை ஏற்படுத்துமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினரை வேண்டிக்கொள்கின்றேன். சைவ சித்தாந்த சமாசம் இதில கண்ணுங் கருத்துமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன். இதற்குத்தமிழகத்திலுள்ள சைவாதீனங்கள் பொருளுதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இக்காலத்தில் சைவாதீனங்கள் சைவப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருப்பது போற்றத்தக்கதாகும். அவர்களது முயற்சி மேலும் வளர வேண்டும். சைவத் தொண்டை முற்காலத்தில் சைவாதீனங்களே முன்னின்று செய்தன. உடலுக்கு அன்னமும், பிணிக்கு மருந்தும், ஆன்மாவுக்குக் கல்வியும், பிறவிப் பிணிக்கு ஞானமும் அளித்து அவை தொண்டாற்றி வந்தன. இக்காலத்துக் கேற்ற முறையில் சிறந்த வகையில் சைவத் தொண்டு ஆற்றுதற்குத் தக்க கல்வி

தொடர்ச்சி 6ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழக்கறிஞர் இ. சிவகுருநாதா அவர்கள்

2-ம் பக்கத்தொடர்ச்சி

டிலம். குணத்தால்மாத்திரமன்று குலத்தாலும், செல்வத்தாலும், கல்வியறிவாலும் மேம்பட்டுள்ளவர். எவ்வித விஷயத்தையும் எளிதில் யூகித்துக் கிரகித்தறிய வல்லவர். எச்சபையிலும் கூசாதெழுந்து வெகு சாதுரியாலங்காரமாகப் பேசும் திறமையுளளவர். இத்தகைய குணநிசயங்களெல்லாமமையப்பெற்றுள்ள இவ்வுத்தமனை நமித்தருணத்தில் இழக்க நேரிட்டது இந்நாடு செய்த தவக்குறையேயாகும். இறக்கும்போது இவருக்கு வயசு 70.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்,

காலஞ்சென்ற வேலணை மேற்கு ஆறுமுகம் நமசிவாயத்தின் ஆதனங்களின் தத்துவம். —இறந்தவர்

இல 1674 T

1. வேலணை கிழக்கு கணபதியார் ஆறுமுகமும், 2. ஷைபூர் பெண் ஆச்சிமுத்துவும். —தத்துவகாரர்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 1674 T ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956ஸு தை மீ 18உ புதன்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை கிழக்கிலுற "அரவிலுயாமும் மறுபிரிவுகளும்" பா. செ. இல. 22. இதில் டா. கி. இல ஐந்து. (பா கி இல 5) இந்தப் பரப்பு கி. இல ஐந்திற்கும் எல்லை: கிழக்கு, இதன் மிகுதியாதனம், வடக்கு, சின்னத்தம்பி சந்தையாவிற்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள். மேற்கு, சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவிலுக்குரியவாதனம், தெற்கு, கதிர்வேலு பெண் தங்கம்மாவின் ஆதனமும் இரத்தினசபாபதி பெண் அன்னமுத்துவின் ஆதனமும்.

1955-ம் ஸு மார்கழி மீ 16-ம் உ


வை எாம்பமூர்த்தி.
கொம்மிஷனர்

M. 216. 13-1

## பரோபகாரி திரு. சிவகுருநாதர் அவர்கள் மறைவு

2-ம் பக்கத்தொடர்ச்சி

கவே இறுதிக்காலம்வரையும் வாழ்ந்தாராகலின் இவருடைய பிரிவு ஈடு செய்ய முடியாததொன்றென்று யாவரும் வருந்துகின்றனர். அத்தகைய அரிய வாழ்க்கையில் துணை செய்து விளங்கிய ஸ்ரீமதி சிவகுருநாதர் அம்மையாருக்கும் வருந்துகின்ற பிற சுற்றமித்திரர் யாவருக்கும் எமது அநுதாபம் உரியதாகின்றது. இறைவன் திருவருளால் பெரியார் அவர்கள் ஆன்ம சாந்தி அடைவாராக.




## கூட்டுறவு மருந்துச்சாலை

யாழ்ப்பாணம் அரசாங்க வைத்தியசாலை (ஆசுப்பத்திரி) வீதியில் சுதேச வைத்திய கூட்டுறவு மருந்துச்சாலையொன்று திறக்கப்பெற்றுள்ளது. இதை வடமாகாண அரசாங்க அதிபர் ஸ்ரீ எம். ஸ்ரீகாந்தா அவர்கள் திறந்து வைத்தார். அவர் அத்தருணம் பேசும்போது சுதேச வைத்தியர்களுக்கிடையில் ஒற்றுமையென்பது உண்டாகமாட்டாது என்று எண்ணியிருந்த காலம் போய் ஒற்றுமைக்காலம் உதயமாய்விட்டதென்றும் அது தமிழ் மக்களுக்குப்பெரும் நன்மை பயப்பதாகுமென்றும் அதனுல் வைத்தியர்களின் செல்வாக்கு வளருமென்றும் குறிப்பிட்டார்.

## முத்தமிழ் விழா

14-1-56 தைப்பொங்கல் அன்று மாலை 5 மணி தொடக்கம் இரத்மலானைச் சனசமூக மண்டபத்தில் கழகத்தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் எஸ். டி. சிவநாயகம், கி லக்ஸ்மணன், பண்டிதர் மு. ஆறுமுகன் முதலியோர் சொற்பொழிவு ஆற்றுவார்கள். திருமதி. பாஞ்சோதி அம்மாள் இராசமாணிக்கம் அவர்கள் இசை விருந்தளிப்பார்கள். பல நடன நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்று இரத்மலானை தமிழ் முன்னேற்றக் கழகச் செயலாளர் அறியத்தருகின்றார்.

## சுதந்திர தினத்தில் துக்கக் கொண்டாட்டம்

சுதந்திரதினக்கொண்டாட்டத்தை ஒழுங்கு செய்யும் பொருட்டு அரசாங்க அதிகாரிகளின் ஆதரவில் மன்னரில் கூட்டமொன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் சமூகமளித்திருந்த திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் இலங்கைக்குச் சுதந்திரம் வந்தும் தமிழ் மக்கள் சுதந்திரம் அடையவில்லை என்பதை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி, சுதந்திரதினத்தில் கறுப்புக் கொடி பறக்கவிட்டுத் தமிழ் மக்கள் துக்கம் கொண்டாடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மட்டக்களப்பு தமிழ்மொழிப் பாதுகாப்புச்சங்கம் இவ்வாறே தீர்மானித்ததென்றும் அஃதே தன்மானமுள்ள தமிழன் செய்ய வேண்டியதென்றும் மேலும் அவர்விளக்குகின்றார்.

நேயர்கள் நெஞ்சம்

# பொங்கல் திருநாளில் மக்கள் உள்ளங்களில் கருணை பொங்க வேண்டும்!

"தைத் திருநாள் — நல்ல தமிழ்த் திருநாள்" — 'உள்ளங்களில் உவகை பொங்கும் நன்நாள்' என்று பெரியோர்களாலே பெரிதும் பாராட்டப் பெற்ற பொங்கற் புதுநாள் வருகிற 14 — 1 — 56 சனிக்கிழமை வருகின்றது.

இந்த நன்நாள் உழவன் திருநாளாக — தமிழன் பெருநாளாகக் கொண்டாடப்படவேண்டும். அன்பும் அறமும் தழைக்க, உழவும் தொழிலும் வளம்பெற — உலகும் உயிர்களும் உயர்ந்து செழிக்க — மங்கலமாக மனைகள் தோறும் பொங்க வேண்டும் — இன்பப் பொங்கல்.

உழவன் இல்லையேல் — உழவுதொழில இல்லையேல் — உலகம் இல்லை — உயிர்கள் இல்லை. உலகத்தையே உய்ய வைக்கும் உழவு தொழிலுக்கு உறுதுணையாக "கால் நடைகள்" இன்று நம் ஈழமணித்திருநாட்டிலே எப்படிப் பேணப்படுகின்றன....? "வாழ்க அந்தணர்வானவர்ஆனினம்" என்று வாழ்த்துதல் பெற்ற ஆனினத்தை எம்மவர்கள் எப்படி (இன்று) வாழ்த்துகிறார்கள் — எப்படி வளர்க்கிறார்கள்........? இந்த நாட்டிலே தலைமுறை தலைமுறையாக பொங்கற் புனித விழாக் கொண்டாடப்பட்டுக்கொண்டுதான் வருகிறது! ஆனல்........? அன்புணர்ச்சி — இரக்கசிந்தை தான் எம்மவருக்கு இன்னமும் ஏற்படவில்லை. அப்படி இரக்க உள்ளம் உள்ளவர்கள் இருப்பார்களேயானுல் — கமத் தொழிலுக்கு உதவும் காளைகள் — காசுக்காக இறைச்சிக் கடைகளிலே தொங்குமா? மாநகர சபை எல்லைக்குள்ளே — மதிப்புக்குரிய வீதிகளிலே — மக்கள் சஞ்சாரம் செய்யும் இடங்களிலே எத்தனை இறைச்சிக்கடைகள் இடம் பெற்றிருக்கின்றன........? இந்தப் பிணக்கடைகள் எல்லாம் பொங்கற் புதுநாளை முன்னிட்டு மூன்று நாட்களுக்காவது மூடப்படவேண்டும். பொங்கற்பண்டிகையைமுன்னிட்டு இறைச்சியாக்கப்படும் ஒரு சில உயிர்களுக்காவது உயிர்ப் பிச்சை வழங்கப்பட வேண்டும்.

அற உணர்ச்சியும் அன்புணர்ச்சியும் பொங்கும் பொங்கற்புதுநாளிலே மக்கள் உள்ளங்கள் உவகை பொங்க வழிபாடாற்றுவதுடன் அமையாது — உயிர்க்குலம் வாழ — உழவுதொழிலுக்கு உறுதுணையாகவுள்ள கால்நடைகள் — ஆடுகள் எல்லாம் துள்ளிக்குதித்து இன்பப் பொங்கல் காண வழி ஏற்படுத்த வேண்டும். இறைச்சிக் கடைகள் குறைந்தது மூன்று நாட்களுக்காவது மூடச் செய்ய வழிவகுக்க வேண்டும். பொங்கல் விழாவின் புனிதமான கருத்தை மக்களுக்கு எடுத்துக்காட்டி இது போன்ற செம்மையானநெறியில் மக்கள் வாழ்க்கை நடத்த முன்வர, பொதுநலக் கழகங்கள் — முன்னேற்றச் சங்கங்கள் உழைக்குமா.......? பிரசாரம் செய்து, "ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று" என்னும் திருமறையின் தெய்வ வாக்கை வையத்துளோர் வாழ்க்கையில் அமைத்து இன்புற்று இனிது வாழ நாட்டுநலனில் ஆர்வமுள்ள நன்மக்கள் — பொதுநலத் தொண்டாற்றும் கழகங்கள் முன்வந்து உழைக்கவேண்டும். மக்கள் உள்ளங்களிலே கருணையுள்ளம் பொங்குமா........? காலகதியிலாவது இந்த நல்ல எண்ணம் நிறைவேற நன்நோக்கமுள்ளவர்கள் உழைப்பார்களாக. சுடம்

இங்ஙனம்,
கா. இரகுநாதன்

அம்பாள்வீதி, நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம், 10-1-56.

## எங்கள் அறிவித்தல்

சனிக்கிழமை 14—1—56 சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையும் இந்துசாதனக் காரியாலயமும் தைப்பொங்கல் திருநாளின்பொருட்டு மூடப்படுமென்று அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அதிபர்.

# தமிழரின் இருளைப் போக்குக!

எதிரில் வரும் சனிக்கிழமை (14-1-56) தைத்திங்கள் முதலாம் திகதி. இந்நன்னாள் தமிழரின் பொன்னுள். உழவரின் பெருநாள். மார்கழித் திங்கள் தேவர்களுக்கு விடியும் நேரம். திருப்பள்ளியெழுச்சியும் திருவெம்பாவையும் பாடிக் கடவுளைத் துதித்த மக்கள், தைத்திங்களில் புதிதாய் அறுவடை செய்து எடுத்த நெல்லரிசி கொண்டு பொங்கி, காசினி

திரு ப. இ. தேவராசா
கொழும்பு

பிருளைப் போக்கும் கதிரவனைத் தொழுது, சுற்றத்தவருடனும் நண்பர்களுடனும் புதுப் பொங்கலை உண்டு மகிழ்வர். ஆண்டு முழுதும இரவும் பகலும் உழைத்த உழவர். தம் உழைப்பின் பயன் கண்டு களிப்பர். இத்தத் தமிழ்த்திருநாளில், வீடுதோறும் சுதையின் விளக்கம்; வீதிதோறும் மங்கல முழக்கம்.

இவ்விழா நடைபெறும்காலமும் இயற்கையின் எழிலைக் கண்டு இன்பம் பருகும்காலம். கார் உலாவும் வானமும, நீர் நிறைந்த ஏரியும் எங்கும் காணும் காலம். இயற்கையன்னை பச்சைப்பசேலெனப் பசுமையான புடவை உடுத்து பன்னிற மலர்கள் சூடி, காயும் கனியும் கரும்பும அணிந்து காட்சி தரும் காலம், பழையன கழிதலும் புதியன புகுதலும் நிகழும் காலம். "பூவும் புகையும் பொங்கலும் கொண்டு இல்லுறை வணங்கி, வயிறார உண்டு மகிழும் காலம்.

பொங்கலுக்கு மறுநாள் நிகழ்வது மாட்டுப் பொங்கல். மாடு என்றால் செல்வம் என்று பொருள்படும். மக்களின் செல்வம் மாடு. மக்களுக்காக உழைக்கும் பிராணிகளில் மிகச் சிறந்தது மாடு' மாடு இல்லையேல் பயிர்த்தொழிலும், பண்ணையும் இல்லை. பாலும் நெய்யும் தந்து உடலைக் காப்பது பசு. "அறந்தரு நெஞ்சொடு அருள்சுரந்தூட்டும்" பசுக்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதுதமிழரின்கொள்கை.

இக் காலம் தமிழருக்குச் சோதனைமிக்க காலம், ஆங்காங்கே ஒற்றுமையின்மையும் அபாயக் குரலும் கேட்கும் காலம். தமிழனை "என்கதி என்னவாகும்" என்று ஏங்கும் காலம். இப்பொங்கற் திருநாளுடனாதல் தமிழருக்கு விமோசனம் ஏற்படாதா?

'இப் பொங்கல் பெரும் பொங்கலாக வேண்டும். நம் நாட்டின் வெற்றிடம் எல்லாம் விளைநிலமாகவேண்டும். எல்லாரும் உண்ண உணவும் உடுக்க உடையும், தொழிலும் பெற வேண்டும். சாதிசமய வித்தியாசமின்றி வாழவேண்டும். நமக்கு விமோசனம் கிடைக்க வேண்டும். தமிழ்த்தாய் அரியாசனத்தில் அமர்த்திருத்தல் வேண்டும். 'பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க' வேண்டும். ஞாலத்தின் இருளைப் போக்கும ஞாயிறு தமிழரின் இருளைப் போக்கி நல்வழி காட்டவேண்டும்'' என்று எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்துவோமாக

முன்னிதழ்த் தொடர்ச்சி

### மகா கவி காளிதாசரின்

# குமார சம்பவம்

———=○=———

தமிழாக்கம்

பரமேஸ்வரக்கழகம் — ச. இராமச்சந்திரன்

செவ்வையுட னெவ்வாறு செப்பினைநீ யப்படியே
சௌவை பெருகக் கடிதவவிர் தெம்பதங்கள்
வெளவிபிட மற்றோர் மனமழுங்கி யாமூலைதல்
எவ்வுயிர்க்கு மோருயிரே இன்னு மறிந்திலையோ. 91

தாரகனென் றெவருஞ் சாற்ற வருமவுணன்
பாரொடுவின் ணுக்கும் பரனேநீ தந்தவரம்
காரணம தாகக் கலங்கவுல கெல்லாமோர்
சூா னெனத்தூம கேதுவெனத் தொட்டுலைப்பான். 92

நஞ்ளு மவன்றன் னகரினிடை ஞாயிறுதான்
நீளு மிலஞ்சி நிறைந்திலகு செம்பதுமம்
தாளி னலரத் தருமொளியல் லாதணுவும்
வேனெ பகலெனினும் வெம்மைசெய மாட்டானல். 93

முன்னு ளெமக்கருளு முக்கணுடை யெம்பெருமான்
தன்னோர் சடையிற் தரித்தகலை தானொளிய
இன்னே அவுணனவற் கெல்லாக் கலையானும்
தன்னு லியன்றபணி சந்திரனுந் தான்புரிவான். 94

பூங்காவில் வீசிற் புதுமலரை வெளவினனென்
ருங்கோது குற்ற மதனைமிக வஞ்சினனுய்ப்
பாங்கே யொதுங்கு பவனனவன் விஞ்சிலனல்
நீங்கா விசிறி கிகழ்த்தவரு மெய்வளியே. 95


கோட்டை அலடயாள
இரட்டைப் பீலி
# வீட்டு ஓடுகள்

திறமானதிலும் திறமானது

உறுதிக்கும் நம்பிக்கைக்கும் ஒப்பில்லாதது. பெருமழையில் மிகச் சிறிய அளவு நீரை உறிஞ்சுகின்றது. மழை காலத்தில் தண்ணீர் சிறிதாயினும் ஒழுகமாட்டாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதை உபயோகிக்கும் பெருந் தொகையினரின் அபிப்பிராயத்தைக் கேட்டறிக.

நீண்டகால உபயோகத்தில் திறமான பொருளே மலிவானதாகும்.

வில்லியம் மேதர் சன்ஸ்.
சோல் ஏஜன்ஸ், யாழ்ப்பாணம்.

M. 204. 23, 25-12—6, 13-1.


## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இருவாரப் பலன்கள், 15—1—56 —— 21—1—56

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

பல இடைஞ்சல்கள் உண்டான போதிலும் நீர் இந்தவாரம் உம்முடைய முயற்சிகளில் சித்திபெய்துதல் நிச்சயம். இனத்தவர்கள் உமக்கு அதிகம் கோபம்மூட்டுவர்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

குடும்பச் சிக்கல்கள் தொடர்ந்து நிலைக்கும். ஆனால் உம்முடைய வேறுசில துன்பங்கள் நீங்கும். பணநிலைமைகள் திருந்தும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

வாரத்தின் முதல்நாள் உம்மைச் சிறிது நிலைகுலைக்கக்கூடும். மிகுதி வாரம் நல்லதாகும். தனலாபம் நிச்சயம். ஆனால் தேகசுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

ஞாயிறு காலையும் திங்கள் செவ்வாயும் கவனமாய்க் கழிக்க வேண்டும. குடும்பக் குழப்பங்களுககும் இனத்தவர்கள்மூலம் தொந்தரவுகளுக்குமிடமுண்டு. வாரமிகுதி நன்ருகும். எதிரிகளை வெல்லுதல் நிச்சயம்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம, 1ம் பாதம்.**

முன் அரைவாரம் நல்லதாகும். அன்னியர் அதிக உதவி செய்வர். தனலாபமும் நிச்சயம். புதன் வியாழனும் வெள்ளிகாலையும் கவனமாய்க் கழிக்கவேண்டும். அபாயங்களைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். வாரத்தின் கடைசிநாள் நல்ல அதிட்டமானதாகும்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

பணத்துறையில் நல்ல வாரம். ஆனல் மனச்சமாதானமிருக்கமாட்டாது. புதுக்குடும்பச் சிக்கல்கள் உண்டாகும். வெள்ளி பிற்பகலும் சனியும் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

நண்பர்களுடன் சண்டைகளுக்கும் பிழை எண்ணங்களுக்குமிடமுண்டு. உம்முடைய கருமங்களில் ஆராய்வில்லாத தீர்மானங்களைச் செய்யவேண்டாம். உத்தியோகத் துறையில் நலவாரம.

**விருட்சிகராசி விசாகம் 4-ம பாதம் அநுஷம், கேட்டை.**

இந்தவாரம் உமக்கு மனச்சமாதானமிருக்க மாட்டாது. தேகசுகமும் நல்லாயிருக்கமாட்டாது. அவமானங்களைத் தவிர்க்கவும். நடுவாரத்தின் பின் பண நிலைமைகள் திருந்தும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

உம்முடைய கருமங்களில் சில திருத்தங்களுக்கிடமுண்டு ஆனல் நீக்கவேண்டிய சிக்கல்களுமிருக்கின்றன. இனத்தவர்கள் உமக்குச் சிறிது செலவுண்டாக்கக் கூடும். வார இறுதியில் கண்நோய்க்கிடமுண்டு.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இந்தவாரம் சில சொந்தக் காரியங்கள்பற்றி நீர் சலனப்படுவீர். தேகசுகமும அதிகம் நல்லாயிருக்க மாட்டாது. ஆனல் உத்தியோகத் துறையில் நல்லவாரம். நீர் உம்முடைய இடைஞ்சல்களிலிருந்து நீங்கக்கூடியதாயிருக்கும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

கூடுதலான சில பாரங்கள் இந்த வாரம் உம்மில் சுமத்தப்படும். அதன்விளைவாக உமக்கு அதிகம் மனச் சமாதான மிருக்கமாட்டாது. வார இறுதியில் பணநிலைமைகள் அதிகம் திருந்தவேணடும். புது முயறசிகள் சித்தியாகும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

நண்பர் இந்தவாரம் அதிக உதவியாயிருப்பர். உம்முடைய இனத்தவர்களை அதிகம் நமபவேணடாம். உத்தியோக சித்தி நிச்சயம். வார இறுதியில் செலவதிகரிக்கும்.

## புராணப் படிப்பு

—0—

சிவஸ் தலங்களுக்குள்ளே சிறந்ததாக விளங்கும் சிதம்பர க்ஷேத்திரத்தின் மகிமையைக் கூறுகின்ற புராணங்களுக்குள் ஒன்ருகிய கோயிற் புராணப் படிப்பு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் 30-12-55 அன்று சபை நாவலர் மண்டபத்தில் ஆரம்பமாகி தினமும் மாலை 6 மணிக்கு நடைபெற்று வருகின்றது. பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரஐயர் உரையாசிரியராகக் கடமையாற்றிவருகின்ருர்.

"என்றுமருந் தவமுயல வினி
வேண்டா மியாவர்க்கும்
பொன்றுமுடல் கன்றுமுனிப்
பொற்கோயிற் புகழ்மாலை
சென்றுசெவிப் புலன்புகுமேற்
றீவினைக ளவை தீர்க்கு
மன்றினருள் புரிவிக்குந்
தெரிவிக்கு மலர்ப்பாதம்"

என இந் நூலாசிரியராகிய உமாபதிசிவாசாரியர் அவர்கள் இந் நூற் பாயிரத்திற் கூறியவாறு இந்நூலைப் படிப்பவர்களும் கேட்பவர்களும் தில்லை நடராசப்பெருமானுடைய திருவருளைப்பெறுவதோடு அவருடைய செந்தாமரை மலர் போலுந் திருவடியையுந் தொழுதற்கு அருகராவார்கள்.

சைவாபிமானிகள் இப் படிப்பைக்கேட்டு உய்தியடைவார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவ பரிபாலனசபை
யாழ்ப்பாணம்
10-1-56.

## தைப்பொங்கல்

———

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

மாகின்றது. ஆகவே தைப்பொங்கல் நாளின விடியற்காலம் மக்கள், தேவர் ஆகிய இருசாரருக்கும் சிறந்த வழிபாட்டுக் காலமாகின்றது இத்தகைய சிறந்த காலத்தில் தவம் முயன்று திருவருட் பேற்றைச் சைவமக்கள் பெறுவர்.

தைப்பொங்கல் விழாவிற் காணவரும் இம்மூன்று சிறப்புக்களையும் மனத்திலிருத்தி அவரவருக்கியைந்தவாறு வழிபாடாற்றி யாவரும் இன்புறுவோமாக.

———

## சைவசித்தாந்த நுண்பொருள் விளக்கம்

———

4-ம் பக்கத்தொடர்ச்சி

மான்கள் வேண்டும். இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சந்நியாசிகள் கல்விமான்களாகவும், சேவை முறைகளில் பயிற்றப்பட்டவர்களாகவும் இருப்பது குறிப்பிடத் தக்கது. இத்தகைய சைவத் தொண்டர்களைப் பயிற்றுவிக்கச் சைவாதீனங்கள் வசதிகள் ஏற்படுத்தவார்களென்று நம்புகிறோம்.

(வளரும்)


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு வீகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிருப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை.**

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond.) residing at 245, Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai. Jaffna on Friday Jan, 13. 1956

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org